**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| MC.No. | - | MC.No.03/2022 |
| Deposition of Witness for | - | PW –1 |
| Name and Age | - | Mangammal(27) |
| Father / Husband Name | - | Marimuthu |
| Occupation | - | Housewife |
| Village | - | Veerasanur |
| Taluk | - | Palacode |

நாள் - 21.05.2024

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873.

**Respondent Present.**

**ம.சா. 1**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் B.Sc.,B.Ed., படித்துள்ளேன். நான் திருமணத்திற்கு முன் B.Sc., படித்தேன். எதிர்மனுதாரர் என்னுடைய திருமணத்திற்கு முன்பு உறவினர் கிடையாது. நான் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் என்னுடன் சேர்ந்து வாழ எதிர்மனுதாரர் சேர்ந்து வாழும் மனு எண்.133/2020 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி மனு குடும்ப நல நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது சமாதானத்தின் அடிப்படையில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதாக உறுதியளித்ததால் மேற்படி மனு 16.03.2021ம் தேதியில் வாபஸ் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனு வாபஸ் பெறப்பட்ட பின்னர் நான் எதிர்மனுதாரருடன் சுமார் 1 வருடம் சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். பின்னிட்டு நான் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழ வேண்டி குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP எண்.180/2022 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். HMOP No.180/2022 மனுவில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது எனவும், குழந்தையை ஒப்படைக்க முடியாது எனவும் கூறியதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல எதிர்மனுதாரர் வேறொரு திருமணம் செய்துகொண்டதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிர்மனுதாரர் வேறொரு திருமணம் செய்துகொள்ளவில்லை என்றாலும் நான் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழ மறுத்த காரணத்தினால் தான் 12.12.2023ம் தேதியில் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை அவருடைய குழந்தையை பார்ப்பதற்கு கூட அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இரண்டாவதாக லித்தீஸ் என்ற ஆண் குழந்தை பிறந்ததை பார்ப்பதற்கு எதிர்மனுதாரரை பார்ப்பதற்கு நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தையை பார்ப்பதற்கு எதிர்மனுதாரரையும், பெற்றோரையும் நான் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ குடும்ப நல நீதிமன்றத்தில் இரண்டு முறை மனு தாக்கல் செய்யப்பட்ட போதிலும் நான் எதிர்மனுதாரருடன் வாழ மறுத்துவிட்ட காரணத்தினால் எதிர்மனுதாரர் என்னிடம் இருந்து விவாகரத்து பெற வேண்டி HMOP.No.46/2024 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி HMOP.No.46/2024 மனுவானது வருகின்ற ஜுன் மாதம் 05ம் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2020ம் ஆண்டிலிருந்து நான் என்னுடைய குழந்தைகளை பார்ப்பதற்கு எதிர்மனுதாரரை அனுமதிக்கவில்லை என்றாலும், அதனால் தான் குழந்தைகளுக்கு தேவையான ஜுவனாம்ச உதவிகளை செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை திருமணம் செய்துகொண்ட பின்னர் சவுளூர் கிராமத்தில் எதிர்மனுதாரருடன் எத்தனை நாட்கள் வாழ்க்கை நடத்தி வந்தேன் என்றால் 6 மாதம் ஆகும். திருமணத்திற்கு முன்னர் எதிர்மனுதாரர் என்ன படித்திருந்தார் என்றால் B.E படித்திருந்தார். எங்களுடைய திருமணத்திற்கு முன்பாக

Web Copy

எதிர்மனுதாரர் பெங்களூருவில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். பெங்களூருவில் நான் எதிர்மனுதாரருடன் சுமார் 5 மாதங்கள் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். பெங்களூருவில் சரியான வீடு எடுத்த பின்னிட்டு எதிர்மனுதாரர் என்னை அழைத்து செல்வதாக கூறினார் என்றாலும், நான் எதிர்மனுதாரர் என்னை பெங்களூருக்கு அழைத்து செல்லவில்லை என பொய்யான சங்கதிகளை மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் பெங்களூருவில் வசித்து வந்த மேற்படி 5 மாதமும் நான் எதிர்மனுதாரருடன் எதிர்மனுதாரருக்கு தேவையான சவரட்சணைகளை செய்யவில்லை என்றாலும், வீட்டினை சரியாக பராமரிப்பு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் B.Ed., படிப்பதற்கு தேவையாக பண உதவிகளை எதிர்மனுதாரர் தான் செய்து வந்தார் என்றாலும், நான் B.Ed., படிப்பதற்கு ரூ.35000 த்தை தருமபுரி லட்சுமி நாராயணா கல்லூரியில் கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. நான் B.Ed., படிப்பதற்கு என் பெற்றோர்கள் ரூ.85000 செலுத்தினார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி ஆவணங்கள் என் கைவசம் உள்ளது. மேற்படி பணம் கட்டியதற்கான ரசீதுகளை நான் இதுநாள் வரையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2019 ம் ஆண்டில் B.Ed. படித்தேன் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தின்போது என்னுடைய பெற்றோர்கள் எனக்கு திருமண சீர்வரிசையாக செய்த 20 சவரன் நகைகளையும் நான் எதிர்மனுதாரரிடம் இருந்து திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். என்னுடைய பெற்றோர்கள் எதிர்மனுதாரருக்கு கொடுத்த இருசக்கர வாகனம் TN 24 AM 8280 என்ற வாகனத்தையும் எதிர்மனுதாரரிடம் இருந்து நான் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரர் மீது கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதன்பின்னிட்டு நான் 19.02.2020 ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எதிர்மனுதாரர் மீது புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எங்களுடைய குழந்தைகளை எதிர்மனுதாரர் பார்க்க வேண்டி தருமபுரி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நீதிமன்றம் உத்தரவிட்டால் நான் என்னுடைய குழந்தைகளை எதிர்மனுதாரர் பார்ப்பதற்கு அனுமதிளிக்க தயாரா என்றால் இல்லை. நான் குழந்தைகளை எதிர்மனுதாரரை பார்க்க அனுமதியளிக்காத காரணத்தினால் தான் குழந்தைகளுக்கு தேவையாக பணிவிடைகளை செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. குழந்தைகளை பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் எதிர்மனுதாரரும், அவரது பெற்றோரும் தயாராக உள்ளார்கள் என்றாலும், நான் குழந்தைகளை எதிர்மனுதாரர் பார்ப்பதற்கு அனுமதியளிக்க தயாரா என்றால் இல்லை. எதிர்மனுதாரரும் அவரது பெற்றோர்களும் குழந்தைகளை பார்ப்பதற்கு பலமுறை முயற்சி செய்தபோதிலும், நானும், என்னுடைய தாயாரும் அவர்களை குழந்தைகளை பார்ப்பதற்கு அனுமதிக்காமல் அவமானப்படுத்திவிட்டோம் என்றால் சரியல்ல. 12.05.2021 ம் தேதியில் நான் மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரர் மீது அளித்த புகாரில் எங்களுக்கு குழந்தைகள் இருப்பதாகவோ அதனால் என்னையும், எதிர்மனுதாரரையும் சேர்த்து வைக்குமாறு கூறவில்லை என்றால் சரிதான். மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் அளித்த அதே புகார் மனுவினை மீண்டும் நான் 24.12.2021 ம் தேதியில் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும் அனுப்பி வைத்தேன் என்றால் ஆமாம். மேற்படி மனுவிலும் நான் குழந்தைக்காக வேண்டி எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இருப்பதாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். 27.01.2022 ம் தேதியில் தருமபுரி காவல் கண்காணிப்பாளரிடம் மேற்படி புகார் மனுவில் மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் நான் அளித்த அதே சங்கதியை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையங்களிலும், முதலமைச்சர் தனிப்பிரிவிலும் மாறி மாறி எதிர்மனுதாரர் மீது 2019 ம் ஆண்டு முதல் 2022 ஜனவரி வரையில் புகார் அளித்த காரணத்தினால் எதிர்மனுதாரரால் வேலைக்கு எதுவும் செல்ல

Web Copy

இயலவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது நிரந்தர வேலைக்கு எதுவும் செல்லாமல் இருந்து வருகிறார் என்றாலும், அவருக்கு போதுமான வருமானம் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது நான் பல புகார்களை அளித்த காரணத்தினால் அவரால் பெங்களுருவில் நிரந்தர பணி செய்யஇயலவில்லை என்றாலும், அவ்வாறு நிரந்தர பணி செய்திருந்தால் அவர் மாதம் ரூ.85000 வருமானம் ஈட்டியிருப்பார் என்றாலும், தற்போது எதிர்மனுதாரர் தற்காலிக பணியாக கிருஷ்ணகிரி மருத்துவமனையில் electrician ஆக பணி செய்து வருவதால் மாதம் ரூ.15000 மட்டுமே வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் அது தவறாகும். நான் என்னுடைய குழந்தைகளுடன் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புவதாக இதுநாள் வரையில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மீதும் அவர்களது பெற்றோர்கள் மீதும், பொய்யான காரணங்களை கூறி இந்நீதிமன்றத்தில் DVC.No.01/2023 தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் ஆனால் அதிலுள்ள காரணங்கள் உண்மையானது ஆகும். மேற்படி DVMC மனுவில் என்னுடைய மூத்தார் மீதும் பொய்யான குற்றச்சாட்டுக்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய தாயாருடைய பேச்சை கேட்டுக்கொண்டு என்னுடைய குழந்தைகளை எதிர்மனுதாரரிடம் காட்ட மறுத்து வருகிறேன் என்றாலும், அதனால் எனக்கு மனுவில் கூறியுள்ள ஜுவனாம்ச தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் சங்கதிகளை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றாலும், உண்மையான சாராம்சங்களை கூறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் நான் எதிர்மனுதாரரை தாக்கியதாக கூறியுள்ளேன் என்றாலும், எனக்கு காயங்கள் ஏற்பட்டதற்கான காயச்சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை ஆனால் வீடியோ தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள CD ல் எதிர்மனுதாரர் என்னை தாக்கியதாகவோ குழந்தைகளை தாக்கியதாகவோ இல்லை என்றால் அது தவறு. குழந்தைகளை அழைத்து செல்ல வேண்டி தான் வாக்குவாதம் நடைபெற்றது என்றாலும், நான் சொல்லுவது போல் தகராறு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மனுவில் 3 முதல் 15 பாராக்கள் வரையில் எதிர்மனுதாரருடன் குழந்தையின் நலனுக்காக நான் சேர்ந்து வாழ விரும்புவதாக எந்த இடத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிரந்தர பணியில் இல்லாத காரணத்தினாலும் அவர் குழந்தைகளை பார்த்துக்கொள்ள தயாராக இருப்பதாலும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஜுவனாம்ச தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழ மறுப்பதால், எனக்கு ஜுவனாம்ச அளிக்க எதிர்மனுதாரர் விரும்பவில்லை என்றாலும் ஆனால் குழந்தைகளை பார்த்துக்கொள்ள எதிர்மனுதாரர் தயாராக உள்ளார் என்றால் நான் குழந்தைகளை எதிர்மனுதாரரிடம் அனுப்ப விருப்பமில்லை. குழந்தைகளின் மீது பெற்றோர்களுக்கு சரிசம உரிமை உள்ளது என்றாலும் அதனால் எதிர்மனுதாரருக்கும் உரிமை உள்ளது என்றாலும், நான் குழந்தைகளை அனுப்பிவைக்க மறுப்பது தவறானது என்று சொன்னாலும் நான் குழந்தைகளை அனுப்பிவைக்க மாட்டேன். என்னுடைய மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆகத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

S/d. A.Balakrishnan, B.A.,B.L.,
Judicial Magistrate(FAC),
Palacode.

Web Copy